# இசைக்கும் வயலின் ஏன் எரிந்து போனது!

**கரவைதாசன்**



கவிஞர் முல்லையூரான் அவர்கள் 2006ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம்திகதி அன்று டென் மார்க்கில் காலமாகிவிட்டார்.

கவிஞர் முல்லை யூரான் அவர்கள் ஈழத்தின் வன்னிப்பகுதியிலுள்ள வற்றாப்பளை என்ற ஒரு அழகிய கிராமத்தைச் சேர்ந்தவர். அந்தக் கிராமத்தின் வைரம் நிறைந்த தாய்மையின் ஒவ்வொரு அணுவிலும் தன் வாழ்வு தொடங்கிற்று என்றும் மண் புழுதிகள், கோவிற்கரைகள், வயல்வெளிகள், அழகான நந்திக் கடற்கரை, வறுமையிலும் சுரண்ட லிலும் சிக்கித் தவிக்கும் விவசா யிகள், சாதி ஒடுக்குமுறையால் கோணிப்போய் மானுட எலும்புகளே இன்னொரு மானிடத்தின் உணவா கும் கறள் பிடித்துப் போனதொரு தமிழ் இழிவுகள் போன்றவையே தனது கிராமச் சூழலாக வளைந்திருந் ததாகவும், அந்த வளைவுகளே தனக்கு நிமிர்ந்த சொற்களைத் தன் படைப்புகளுக்கு தந்ததாகவும் முல்லையூரான் அவர்கள் பல இடங்களில் குறித்துள்ளார்.

புலம்பெயர்ந்தபோது சொந்த மண்ணிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்ட தன்மையும் புதிய சூழலுடன் உணர்வுபூர்வமாக இணையமுடியாதுமுள்ள சோகமும் கூடவே இணைவாக்கத்தினது தேவையும் அவரது கதைகள் பலவற்றின் கருப்பொருள்களாகியுள்ளன. கோரமாகிக் கொண்டிருக்கும் உலகச் சூழலின் நிகழ் அரசியல், இலக்கிய விடயங்கள் அவரது கட்டுரை களின் மையக்கருவாக அமைந்துள்ளன.

சிறந்த பேச்சாளருமான முல்லையூரான் அவர்கள் டென்மார்க்கில் பலதரப்பட்ட விழாக்களிலும் கலந்து கொண்டு தனது கருத்தினைத் தயக்கமின்றி கூறி வந்துள்ளார்.

ஒரு முறை டென்மார்கில் கேர்னிங் என்ற நகரிலே நடந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினவிழாவிலே உரையாற் றும்போது தான் கண்ட முதலாவது மாவீரர் தனது வற்றாப்பளை ஊரைச் சேர்ந்த 'குடை முருகன்' அவர்கள் எனக் கூறியிருந்தார்.

சாதி ஒடுக்குமுறையால் கோணிப் போயிருந்த சமூகத்தி லிருந்து வந்த குடை முருகன் ஒரு சமூக விடுதலைப் போராளி. அவனது சமூகத்தினை சேர்ந்த வர்கள் செருப்புப் போடவும் குடைபிடிக்கவும் மறுக்கப்பட்டி ருந்த போது அதனை உடைத்து, முதலில் அவ்வூர்த் தெருக்களிலே செருப்பு மாட்டி, குடை பிடித்துச் சென்றதற்காக மேட்டுக்குடியி னரால் அவனது குடை பறிக்கப் பட்டே தாக்கப்பட்டான். இரத்தம் தோய்ந்த நிலையிலும் செருப்புக்களுடன் அவன் தன் வீடு வரை நடந்து சென்றான். அவன்தான் தான் கண்ட முதலாவது மாவீரன் என அக்கூட்டத்திலே குறிப்பிட்டிருந்தார்.

முல்லையூரான் அவர்கள் ஏலவே கிராமத்தில் கையெழுத்துப் பிரதியாக பத்திரிகை கொண்டு வந்த உந்துதலில் யாழ் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலே 'அக்குனிக் குஞ்சு' என்ற சஞ்சிகையை தன்னொத்த நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு வந்தார். அங்குதான் தன் துணையான நாகேஸ்வரி (குஞ்சக்கா) அவர்களையும் சந்தித்தார். இவர்களுக்கு கௌசி, எழினி பிள்ளைகள்.

'போர்க்காற்று', 'நிர்வாணவிழிகள்', 'அடைக்கலங் குருவி' ஆகியவை அவரது கவிதைத் தொகுப்புக்கள். 'ஈழம் எழுந்து வருகிறது', 'குங்குமம்' என்பவை அவரது நாவல்கள். 'நாவற்பழங்கள்' என்று ஒரு வானொலி நாடகம். டொமினிக் ஜீவாவின் மல்லிகைப் பந்தலின் வெளியீடாக 'சேலை' என்ற இவரது சிறுகதைத் தொகுப்பும் ஈழத்தில் வெளிவந்துள்ளது.

இசைக்கும் வயலின் ஏன் எரிந்து போனது!